220588

# இந்திய சுடர்

©

JL
1/563m 211, N92
N92 1.1
220588

# இந்திய சுடர்

சிறப்பாசிரியர்: பேராசிரியர் அம்பேத்கர்பிரியன்


தமிழ்நாடு ஆவணக் காப்பகம் மற்றும்
1 1 டிச 1992
தமிழ்நாடு ஆவணக் காப்பகம்,
சென்னை - 600 008.




விலை ரூ 2.50


JL
7563
N92 .1.1

# பறையன் யார்?



'பறையன் பத்திரிகையில் தாத்தா ரெட்டைமலை சீனிவாசனின் இதயக் குமுறல்!

1893 ஆம் ஆண்டு தாத்தா அவர்களால் கொண்டு வரப்பட்ட 'பறையன்' பத்திரிகையில் 'பறையன்' என்பவன் யார்? என்பதற்கு அளிக்கும் விளக்கமாவது, "நான்! நான்!! என்ற மகாமந்திரத்தை ஜெபித்துக் கொண்டிருப்பவன், தன்னை உணர்ந்து சகலமும் அறியும் ஞானியாகி, தலைவனைக் காண்பது போல் நான்! நான்!! என்று எவன் ஒருவன் தன்னையும் தன் இனத்தையும் மறுக்காமல் அச்சமும், நாணமும் இல்லாமல் உண்மை பேசி, தன் சுதந்திரத்தைப் பாராட்டுகிறானோ அவன் மதிக்கப்பெற்று இல்வாழக்கையில் சம்பத்து உள்ளவனாய், நித்திய சமாதானத்துடன் வாழ்வானாகை யால், 'பறையர்' இனத்தவன் ஒருவன் 'பறையன்' என்பவன் 'நான் தான்' என்று சொல்ல முன் வந்தால் ஒழிய அவன் சுதந்திரம் பாராட்ட முடியாமல் தாழ்த்தப்பட்டு என்றும் தரித்திரனாய் வாழ்வான்.

100 ஆண்டுகளுக்கு முன் இன உணர்வினை அன்று ஊட்டினார் தாத்தா. ஆனால், இன்றோ படித்த பட்டதாரிகள் இனப்பற்றை மறந்து சாதிப் பெயரை மாற்றிக் கொண்டு, கேவலமான முறையில் கலப்புத்திருமணம் செய்து கொண்டு வாழ்கின்றார்களே!! இவர்களெல்லாம் தாத்தாவின் பார்வையில் "தரித்திரக்காரர்களே". இப்படிப் பட்டவர்கள் பெற்றெடுத்த குழந்தைகளையாவது இன உணர்வையூட்டி வளர்ப்பார்களாயின் பாராண்ட பரம்பரை "பறையன்" மீண்டும் இப்பாரதத்தை ஆண்டே தீருவான்.

ஆதாரம் : தாத்தா ரெட்டைமலை சீனிவாசன் ஜீவிய சரித்திர சுருக்கம் பக்கம் 8.



நிறம் மாறாத நீல வண்ண மலர்களே! ஜெய்பீம்.

அக்டோபர் மாதம் 10ஆம் தேதி "இந்திய சுடர்" வெளிவருவதாக அறிக்கைகள் விடப்பட்டன. இருந்தாலும் டிக்ளரேஷன் கிடைப்பதில் ஏற்பட்ட கால தாமதம் இரண்டு மாதங்கள் கழித்து இன்று உங்கள் கைகளிலே தவழ்கின்றது. குழந்தைகளைப் பெற்றெடுக்கும் பெற்றோர் கடைசிவரை பாதுகாப்பது வழக்கம். ஆனால் இக்குழந்தை "இந்திய சுடர்" நான் பெற்றெடுத்தாலும் வளர்க்கப் போவது நீங்கள்தான். ஏன் என்றால் உங்கள் நலனுக்காகவே இந்தக் குழந்தையைப் பெற்றெடுத்துள்ளேன். இக்குழந்தை சமுதாயச் சீர்கேடுகளைத் துணிந்து பேசும். ஊமை மக்களாம் செட்யூல்டு இன மக்களை அவதிக்குள்ளாக்கும் கொடியவர்களைத் தனது சுடரால் தீயிட்டுக் கொளுத்தும். இதில் எவருக்கும் ஐயம் வேண்டாம்.

இருளில் கிடந்த இந்தியாவிற்கு சுதந்திரம் தேவைப்பட்டது. சுதந்திரத்தைக் கொடுக்க முன் வந்த ஆங்கிலேயர்களுக்கு இந்திய நாட்டிற்குத் தேவையான "அரசியல் சாசனம்" தேவைப்பட்டது. இந்தியாவின் இருளை அகற்றியவர் டாக்டர் அம்பேத்கர். எனவேதான் நமது பார்வையில் "இந்திய சுடர்" பாபாசாகிப் டாக்டர் அம்பேத்கர் ஆவார். அவரது சிந்தனைகளை, வருங்கால இளைஞர்களுக்கு அவர் கூறிய அறிவுரைகளைத் தாங்கி இந்தக் குழந்தை கிராமம் கிராமமாக பவனிவர இருக்கின்றது. இந்தக் குழந்தையை நேசக்கரம் நீட்டி வரவேற்று ஆதரவு தாருங்கள். வருங்கால இளைஞர்களுக்குச் சரித்திரம் சொல்ல இந்த இதழினை தயவுசெய்து கிழித்துப் போடாமல் பத்திரங்களைப் பாதுகாப்பது போல் பாதுகாக்கவும்.

செலவு செய்வதற்குப் பல வழிகள் உண்டு. ஆனால் உங்களது செலவு இந்த இதழினை வாங்குவதில் அக்கறை காட்டுங்கள். வாங்கியவர்கள் பிறருக்கும் எடுத்துச் சொல்லி வாங்க உதவுங்கள். இந்த இதழ் உங்களது இதழ். எழுத்தாற்றல் உள்ளவர்கள் தங்களது படைப்பினை அனுப்புங்கள். கேள்வி, பதில் பகுதிக்கு கேள்விகளை எழுதி அனுப்புங்கள். அனுப்புகின்ற கேள்விகள் சமுதாயத்திற்குப் பயனளிக்கும் விதத்திலே இருக்கட்டும். கதை, கட்டுரை, சிறுகதை, துணுக்குகள் போன்றவை வரவேற்கப்படுகின்றன. சமுதாய சீர்கேடுகளை தைரியமாக எடுத்துச் சொல்லி, இந்திய

ஒற்றுமைக்கும், ஜனநாயக பாதுகாப்பிற்கும், சாதி மதமற்ற சமதர்ம சமுதாயத்தை உருவாக்கவும் வெளிவரும் "இந்திய சுடர்" உங்கள் வீட்டுக் குழந்தை. அன்பு காட்டி வளர்ப்பது உங்கள் கைகளில் இருக்கிறது. அடுத்த இதழில் சந்திப்போம்.

சிறப்பாசிரியர்.

# தமிழக முதல்வர் கவனத்திற்கு



## நேரு ஸ்டேடியம் டாக்டர் அம்பேத்கர் சிலைபற்றி.

தமிழகத்தின் தலைநகராம் சிங்காரச் சென்னையின் மையமாம் நேரு ஸ்டேடியத்திற்குப் பெருமை சேர்த்தது டாக்டர் அம்பேத்கர் சிலை.

ஏப்ரல் 14 மற்றும் டிசம்பர் 6ம் தேதிகளில் தமிழக மக்கள் கூடும் இடமாகும். தற்சமயம் தமிழக அரசு நேரு ஸ்டேடியத்தைப் புதுப்பிக்க டாக்டர் அம்பேத்கர் சிலையை அகற்றியிருக்கின்றார்கள்.

தமிழக முதல்வர் செட்யூல்டு இன மக்களின் உணர்வுகளை அறிந்து, புதியதாக கட்டப்பட்டு வரும் நேரு ஸ்டேடியத்தின் முன் டாக்டர் அம்பேத்கர் சிலை வைப்பார் என்ற நம்பிக்கை உண்டு. பாராளுமன்றத்தின் முன் டாக்டர் அம்பேத்கர் அவர்களின் சிலை நிற்பது பாராளுமன்றத்திற்குப் பெருமை. அதைப்போல டாக்டர் அம்பேத்கர் சிலையை மீண்டும் ஸ்டேடியத்தின் முன் வைப்பது ஸ்டேடியத்திற்குப் பெருமை. தமிழக அரசுக்கும் பெருமை.

மாங்காடு மகாலிங்கம்.

## சைதை-சின்னமலையில் டாக்டர் அம்பேத்கர் வெண்கலச் சிலை

1986 ஆம் ஆண்டு முதல் சைதாப்பேட்டை சின்னமலையில் டாக்டர் அம்பேத்கர் அவர்களுக்கு முழு உருவ வெண்கலச்சிலை வைப்பதாக தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் மன்றம் மாநில அமைப்பு முடிவு எடுத்து கடந்த 5 ஆண்டு காலமாக போராடி வருகின்றது.

இதற்கிடையில் தமிழக முதல்வர் அந்த இடத்தில் மறைந்த பாரத பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களுக்கு சிலை வைக்க உத்தரவு அளித்துள்ளார். இதை எதிர்த்து தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் மன்றம் போராட்டத்தில் குதிக்கும் வேளையில் அரசு அதிகாரிகள் மாற்று இடம் தேர்ந்தெடுத்து கொடுத்துள்ளார்கள். மாற்று இடத்தில் சிலை வைக்கவும் அனுமதி வழங்கவில்லை. டிசம்பர் 6ம் தேதிக்குள் சிலை வைக்க அனுமதி அளிக்க மறுத்தால் ராஜீவ் சிலை வைக்க உள்ள இடத்தில் டாக்டர் அம்பேத்கர் சிலை வைக்க முறையாக நீதிமன்றம் செல்வோம்.

## வடஆர்க்காடு டாக்டர் அம்பேத்கர் மாவட்ட ஆட்சித் தலைவர் நடவடிக்கை எடுப்பாரா? அம்பேத்கர் தொண்டனின் இதயக்குமுறல்.

உலகத்தில் எந்த நாட்டிலும் இல்லாத அளவிற்கு தமிழகத்தில் அரசியல் சாசனத் தந்தை டாக்டர் அம்பேத்கர் அவர்களுக்கு மாவட்டம் அமைக்கப்பட்டுள்ளது. மாவட்டத்தின் தலைநகரம் வேலூர். சென்னையிலிருந்து பெங்களூர் செல்லும் பொழுது வலப்பக்கத்தில் காட்சிகளைப் பார்த்துக் கொண்டு சென்றால் வேலூர் நெருங்குவதற்கு முன் ஒரு கட்டிடம் வண்ணவிளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு ஜெக ஜோதியாகக் காட்சி அளிக்கும். அந்த கட்டிடம்தான் வடஆர்க்காடு அம்பேத்கர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம். அந்த கட்டிடத்திற்கு முன்னால் பெயருக்குச் சொந்தக்காரரும், செட்யூல்டு இன மக்கள் தெய்வமாக வணங்கிவரும் டாக்டர் அம்பேத்கர் அவர்களுக்கு சிலை ஒன்று நிறுவப்பட்டுள்ளது. அந்த சிலை திறந்த ஒரு சில நாட்கள் வரை அவருக்கு 4 போஃகஸ் லைட் கொடுக்கப் பட்டு சிலை பிரகாசமாக இருந்தது. ஆனால் இப்பொழுது இருட்டடிப்பு செய்தது போல் இருளில் உள்ளது. இருளில் உள்ள சிலையை இதுவரை மாவட்ட ஆட்சித்தலைவர் கண்டதில்லையா? அல்லது பகலில் அலுவலகம் சென்று பகலில் திரும்பி விடுகின்றாரா காரணம் தெரியவில்லை?

பியூஸ் போன பல்பை மாற்ற போதிய நிதி மாவட்டத்தில் இல்லையா அல்லது என்னமோ எங்களுக்குத் தெரியாது. கட்டிடம் இருட்டில் இருந்தாலும் பரவாயில்லை. டாக்டர் அம்பேத்கர் சிலை வெளிச்சத்தில் இருக்க வேண்டும். மாவட்ட ஆட்சித்தலைவர் வெளிச்சம் போட்டுக் காட்டுவாரா?

- அ. ஜார்ஜ், ஆம்பூர்.



சாவிலும் அம்பேத்கர் புகழ் பாடிச் சாக
வேண்டும் - எந்தன் சாம்பலிலும்
அவர் புகழ் மணக்க வேண்டும்
- அம்பேத்கர்பிரியன்

# இந்திய சுடர்

சுடர் - 1 | 1.12.1992 | ஒளி - 1


சிறப்பாசிரியர்
பேராசிரியர்
**அம்பேத்கர்பிரியன்**

ஆசிரியர் :
**கவிஞர் தமிழ்தாசன்**

லேஅவுட் :
**ஓவியர் 'ரைம்'**

அலுவலகம் :
இ21, வெங்கட்டாபுரம்
சைதாப்பேட்டை
சென்னை - 600 015.

வெளியீட்டாளர்
திருமதி. சு. அஞ்சலை



## துணை ஜனாதிபதி வாழ்த்துகின்றோம்! வணங்குகின்றோம்.

இந்திய சுதந்திர நாட்டில் பல்லாண்டு காலமாக அரசியல் வாழ்வில் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட பாபு ஜெகஜீவன்ராம் அவர்கள் பாரத பிரதமராகத் தேர்ந்தெடுக் கப்பட வாய்ப்பிருந்தும் சாதியின் பெயரால் துணைப் பிரதமராகவே வர முடிந்தது.

அதைப்போல, ஜனாதிபதி தேர்தலில் திறமையின் அடிப்படையில் ஜனாதிபதியாக வர செட்யூல்டு இனத்தைச் சார்ந்த திரு. கே.ஆர். நாராயணன் அவர்களுக்கு வாய்ப்பிருந்தும் இனத்தை வைத்து வர முடியவில்லை. அறிவுபுலமை, அணுகுமுறை, அந்நிய நாட்டுக்கொள்கை ஆகியவற்றை மையமாகக்கொண்டு எதிர்க்கட்சிகளின் ஒருமன ஆதரவோடு துணை ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுத்த அனைவருக்கும் இந்திய சுடர் வழியே நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு வாழ்த்தி வணங்குகின்றோம். அடுத்த ஜனாதிபதி செட்யூல்டு இனத்தவர்தான் என்ற' நம்பிக்கையோடு வாழ்வோம்.




## பெண்ணைக் கற்பழித்துக் குழந்தை கொடுத்தவன் தாலிகட்ட மறுப்பு

செங்கற்பட்டு, எம்.ஜி.ஆர். மாவட்டம் செய்யூர் வட்டம். வன்னியர்கள் ஏராளமானவர் வாழும் பகுதி. சிக்கனாங்குப்பம் அருகில் பெறுந்துறவு எனும் குக்கிராமம். இக்கிராமத்தில் ஆதி திராவிட இன மக்களில் பல ஆண்கள் பிழைப்பைத் தேடி சென்னையில் வேலை செய்து பிழைக்கின்றவர்கள். அக்கிராமத்தில் தனியாக உள்ள ஒரு குடிசை வீடு. அழகான, கட்டுடல் கொண்ட இந்திரா (வயது 20) தனது கண் தெரியாத தாயுடன் வாழ்ந்து வருகின்றார். காலனிக்கு ஒட்டினார் போல் வன்னியர் நிலங்கள் உண்டு. இந்திரா வீட்டிற்குப் பக்கத்தில் ஒரு பம்ப்செட், விவசாய நிலங்கள். இவைகளுக்குச் சொந்தக்காரர் ஏழுமலை நாயக்கர். இவருடைய மகன் கோதண்டன் (வயது 26) லாரி டிரைவராக இருப்பவன். இந்திராவின் அழகில் ஈடுபட்டு காதலித்தான் (காதலுக்கு சாதியில்லை. அது கட்டி அணைக்கும் வரையில்தான். வயிற்றில் குழந்தை என்றால் சாதி வந்துவிடும்) காதல் மலர மலர ராணிக்கு 4 மாதத்தில் வயிற்றிலும் குழந்தை மலர்ந்தது. தாலி கட்டும்படி கேட்டாள். ரூ.30/- கொடுத்து 'கருவைக் கலைத்துவிடு' என்று பயமுறுத்தினான். இந்திரா மறுத்தாள். பின் 6 மாதமாக குழந்தை வளர்ந்தது. தைரியமாக சாதி இந்துக்கள் வாழ்கின்ற வீட்டிற்குள் சென்று திருமணம் செய்யும்படி கேட்டாள். அதற்கு கோதண்டன் பெற்றோர் ரூ.5000/- கொடுத்து பிரச்சினையை அதிகப்படுத்தாமல் இருக்க வைத்தார்கள். அதை அவள் வாங்க மறுத்து விட்டாள். பாதிக்கப்பட்ட பெண் ஒரு நாள் நடுஇரவில் தன் அண்ணன் ஏழுமலையுடன், மாவட்ட செயலர் செங்காட்டூர் வளவன் மற்றும் பலர் மாநிலத் தலைவர் இல்லத்திற்குச் சென்று முறையிட்ட பின் நடவடிக்கையில் ஈடுபட்டோம். உடனடியாக அனைத்து உயர் அதிகாரிகளுக்கும் இது பற்றிய செய்திகள் அனுப்பப்பட்டது.

கூவத்தூர் காவல்துறை சப்-இன்ஸ்பெக்டர் முருகாளத்தி எவ்விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. மாறாக சாதியோடு சாதியாக இணைந்து விட்டார் போலும். இக்கொடுமைகளையும் மீறி கடைசியாக நீதிக் கேட்க அதே கிராமத்தில் பஞ்சாயத்து கூட்டப்பட்டது.

### கிராம பெரியவர்கள்.

1. திரு. இராமசாமி நாய்க்கர்
2. திரு. வினாயகம் நாயக்கர்
3. திரு. கிஷ்டப்பன் நாயக்கர்

இதிலும் நீதி கிடைக்கவில்லை. பின்பு அனைத்து புகார்களும் காவல் நிலையத்தில் உள்ள போது செல்வி இந்திராவின் [illegible]ரிய அண்ணன் பி. மணி என்பவர் 12.10.92 திங்கள் அன்று அந்த கிராமத்தின் டீக்கடைக்குச் செல்லும் போது அவர் சட்டையைப் பிடித்து பறச்சியை வைத்து வாழ்க்கை நடத்த சொல்லுகிறீர்களா, பற தேவடியா பசங்களா இவ்வளவு திமிராகி விட்டதா என்று திரு. வினாயகம் நாயக்கர் சொல்லி அடித்து உள்ளார் அதன் பேரில் மாவட்ட செயலாளர் மூலம் காஞ்சிபுரம் பி.சி.ஆர்க்கு மனு கொடுத்ததின் பேரில் அவர்களை, 1. கோதண்டன், 2. வினாயகம் இருவரையும் பி.சி.ஆர் போலீஸ் பிடிக்கச் சென்றது. போலீஸ் பிடித்தால் அவர்கள் கௌரவம் குறைந்து விடும் என்ற காரணத்தினால் மேற்கண்டவர்கள் சென்னை உயர்நீதிமன்றத்தில் அவர்களே ஆஜராகி விட்டனர். அதன் அடிப்படையில் தற்போது காஞ்சிபுரம் பி.சி.ஆர் போலீஸார்தான் நடவடிக்கை எடுக்கின்றனர். இதிலும் கால தாமதம் ஏனோ தெரியவில்லை. இந்த சமநீதி ஆண்டில் இந்த விஷயத்தில் அரசாங்கம் தலையிட்டு இந்த ஆதி திராவிட பெண் இந்திராவுக்கும் அவள் வயிற்றில் வளரும் அந்த குழந்தைக்கும் நீதி கிடைக்க வழி செய்யுமா?

## வேலூர்-அம்பேத்கர் மாவட்டம்

குடியாத்தம் தாலுக்கா வெங்கடாபுரம் கிராமம். இந்த ஊரில் மூர்த்தி என்பவர் கள்ளச் சாராயம் விற்பனை செய்து வருகின்றார். ஊர்மக்கள், இது சம்பந்தமாக பரதராமி போலீஸ் நிலையத்தில் புகார் கொடுத்தும் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல், அதே ஊரைச் சேர்ந்த முத்து என்பவர் மூர்த்தியின் ரவுடிதனத்தைக் கண்டித்துப் போலீஸ் நிலையத்தில் புகார் கொடுத்தும் எஸ்.ஐ. அவர்கள் முத்து என்பவர் மீதும் அவர் குடும்பத்தில் உள்ளவர்கள் மீது கற்பழிப்பு குற்றங்கள் போட்டு, சிறுபிள்ளைகளை விலங்கு போட்டுத் தெருவில் நடந்து சென்று அவமானம் செய்து இருக்கின்றார். இதைக் கண்டித்து ஊர்மக்கள் எஸ்.பி., ஐ.ஏ.எஸ்., ஆகியோருக்கு மனு கொடுத்தும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

மேலும் மூர்த்தி என்பவர் ரவுடிகளைக் கூட்டிவந்து ஊரில் கலாட்டா செய்து வருகின்றார். இது சம்பந்தமாக மூர்த்தி என்பவர் மீது பல கேஸ்கள் இருக்கின்றன. இப்படி இருந்தும் எஸ்.ஐ. அவர்கள் அவரிடம் பணம் வாங்கி கொண்டு, எந்த நடவடிக்கையும் செய்யாமல் இருக்கின்றார். இந்நிலை நீடித்தால் காவல்துறையை எதிர்த்துப் போராட்டம் நடத்துவதாக மாநில அமைப்பின் உத்தரவைப் பெற்று கே.வி. குப்பம் ஒன்றிய நிர்வாகிகள் முடிவெடுத்துள்ளனர்.

- நமது நிருபர், குடியாத்தம்.








## குடியியல் உரிமைகள் பாதுகாப்பு சட்டம் - 1955 - P.C.R. ACT.

1. தீண்டாமை காரணமாக எந்த ஆளையும் பொது வழிபாட்டில் எதிலும் நுழைவதை, அனுமதிக்கப்படுவதை வழிபாடு செய்வதை அல்லது புனிதமான குளம், கிணறு, நீரூற்றுக்களில் குளிப்பதை தடுக்கிறவர் எவராயினும் சட்டப்படி தண்டனைக்குள்ளாவர்.

2. தீண்டாமை காரணமாக எந்த ஆளையும் கடை, பொது உணவுச் சாலை, உணவகம், பொதுத் தேனீர்களுக்கான இடம், எதற்கும் போய் வருவது, அவற்றில் வைக்கப்பட்டிருக்கிற ஏனங்கள் மற்றும் உறுப்படிகளை பயன்படுத்துதல் சம்மந்தமாக எவருக்கும் விரோதமாக முட்டுப்பாட்டை வற்புறுத்துகிற எவராயினும் சட்டப்படி தண்டனைக்கு உள்ளாவர்.

3. தீண்டாமை காரணமாக எந்த ஆளையும் தொழில் பயிலுவது, வியாபாரம் நடத்துவது, எந்த வட்டாரத்திலேயாயினும் குடியிருப்பு வளாகங்கள் கட்டுவது, ஈட்டுவது அல்லது அனுபோகம் செய்வது, பொது வாகனம் எதையும் பயன்படுத்துவது, சமூக, சமய வழக்காடு மற்றும் சடங்கு எதையும் அனுசரிப்பது. அது சம்மந்தமான ஊர்வலம் எதிலும் பங்கு கொள்வது குறித்து முட்டுக்கட்டை வற்புறுத்துகிற எவராயினும் சட்டப்படி தண்டனைக் குள்ளாவர்.

4. தீண்டாமை காரணமாக பொதுமக்களின் நன்மைக்காக நிறுவப்பட்டிருக்கிற மருத்துவமனை, மருந்தகம், கல்வி நிறுவனம் விடுதி எதிலும் எந்த ஆளையும் அனுமதிக்க மறுத்தல், அல்லது அனுமதிக்கப்பட்ட பின்பு வேற்றுமை பாராட்டும் செய்கை எதையும் செய்கிற எவராயினும் சட்டப்படி தண்டிக்கப்படுவர்.

5. தீண்டாமை காரணமாக ஆள் எவருக்கும் சரக்குகளை விற்பனை செய்ய அல்லது பணி செய்ய மறுப்பது சட்டப்படி குற்றமாகும்.

6. தீண்டாமை காரணமாக எந்த ஆளுக்கும் தொந்தரவு செய்தல், கேடுறுத்தல், தொல்லை தருதல் அல்லது விலக்கி வைத்தல் சட்டப்படி குற்றமாகும்.

7. பொதுப்படையாக பொதுமக்களைத் தீண்டாமையை பேசப்பட்ட எழுதப்பட்ட சொற்களால் நேரடியாகவோ, மறைமுகமாகவோ அல்லது பிற வகையால் பயிலுமாறு போதித்தல், தூண்டுதல் அல்லது ஊக்குவித்தல் சட்டப்படி குற்றமாகும்.

8. தீண்டாமை காரணமாக எந்த ஆளையும் தோட்டி வேலை, கட்டும் வேலை, பிணம் எதையும் அப்புறப்படுத்துதல், விலங்கு ஏதொன்றின் தோலை உரிக்க அல்லது அது போன்ற தன்மையதான வேறு வேலை எதையும் செய்ய கட்டாயப்படுத்துதல், வற்புறுத்துதல் சட்டப்படி குற்றமாகும்.

9. தீண்டாமை குற்றத்திற்கான பிரிவு 6-ன்படி தண்டிக்கப்பட்ட ஓர் ஆள் எந்த தொழில் வர்த்தகம், கொள்பணி அல்லது வேலை தொடர்பாக அக்குற்றம் செய்யப்பட்டிருந்திருக்கிறதோ அந்த உரிமம் ரத்தாகவும் அல்லது தற்காலிகமாக நிறுத்தி வைக்கவும் நீதிமன்றத்திற்கு அதிகாரம் உண்டு.

10. தீண்டாமை குற்றத்திற்கு உடந்தையாக இருத்தல் சட்டப்படி தண்டிக்கப்படக்கூடிய குற்றமாகும்.

11. தீண்டாமை குற்றத்திற்கான இச்சட்டத்தின் கீழ் குறைந்தபட்சம் ஒருமாதம் சிறைத்தண்டனை உண்டு.

### ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (கொடுங்குற்றம் களைதல் தடுப்பு) சட்டம் 1989

1. எந்தவொரு முறையிலும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரை தூற்றலோ, துன்புறுத்தலோ, அசிங்கப்படுத்தலோ அவர்கள் குடியிருப்பை ஆக்கிரமித்தலோ அவர்கள் உயிர்க்கும், உடைமைக்கும் சேதம் விளைவித்தலோ சட்டப்படி குற்றமாகும்.

2. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மீது பொய்யான புகார்கள் கொடுத்து அவர்களைத் துன்புறுத்துதலோ அவர்கள் உபயோகிக்கும் குடிநீரை எந்த முறையிலும் அசுத்தப்படுத்தினாலும், பெண்களை மானபங்கம் செய்தலும் சட்டப்படி குற்றமாகும்.

3. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மீது இழைக்கப்படும் குற்றங்கள் தண்டிக்கப்பட்டால் அந்த குற்றத்திற்கு ஏதுவாக இருந்த குற்றவாளியின் சொத்து சட்டப்படி பறிமுதல் செய்யப்படும்.

4. ஒரு பிரதேசத்தின் குடிகள் இந்த சட்டத்தின்படி குற்றம் யாதொன்றிலும் சம்பந்தப்பட்டு இருந்தாலும், உடந்தையாக இருந்தாலும், சம்மந்தப்பட்ட ஆட்களுக்கு புகலிடம் அளித்தாலும் அத்தகைய குடிகள் மீது கட்டு அபராதம் சட்டப்படி விதிக்கலாம்.


5. இந்த சட்டத்தின்படி குற்றங்கள் யாதேனும் செய்ய எண்ணினாலும் கூட அப்படிப்பட்டவர்கள் ஊர்விட்டு ஊர் அனுப்பி விட அதிகாரம் உள்ளது.

6. எந்தவொரு அரசு ஊழியரும் இந்த சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கத் தவறினால் அவர்களு[illegible] தண்டிக்கப்படுவார்கள்.

7. மேற்குறிப்பிட்ட குற்றங்களுக்கும் இந்த சட்டத்தில் உள்ள ஏனைய குற்றங்களுக்கும் குறைந்தபட்சம் கடு[illegible] சிறைத்தண்டனை 6 மாதம் ஆகும்.

8. சில குற்றங்களுக்கும் ஆயுள் தண்டனைக்கும் இச்சட்டம் வழி வகுக்கிறது.

9. இச்சட்டத்தின் கீழ் குற்றம் செய்பவர்களுக்கு முன் ஜாமீன் கிடையாது.




பீம்ராவ்பித்தன்

118, சேரன் தெரு,
ஆழ்வார்திருநகர்,
சென்னை - 600 087.


# மாணவர் பக்கம்

பொது அறிவு - தெரிந்துக்கொள்க.

1. இந்தியாவின் முதல் செய்தித்தாள் எது?
2. சூயஸ் கால்வாய் எந்த இரு கடற்கரைகளை இணைக்கின்றது.
3. வளமான மண் எது?
4. தாழ்த்தப்பட்டோரை மிகுதியாகக் கொண்ட மாநிலம் எது?
5. இந்தியாவின் முதல் அணு உலை எது?
6. 'பிட்வீன் த லைன்ஸ்' எனும் நூலின் ஆசிரியர் யார்?
7. "குறிஞ்சி மலர்" நவீனத்தின் ஆசிரியர் யார்?
8. மனித உரிமைகள் கொண்டாடப்படும் நாள் எது?
9. மனித முகத்தில் உள்ள எலும்புகளின் எண்ணிக்கை யாது?
10. இந்தியாவிற்கு வருகை தந்த முதல் அமெரிக்க ஜனாதிபதி யார்?
11. திருவாசகத்தைப் பாடியவர் யார்?
12. டில்லியை ஆண்ட முதல் பெண்மணி யார்?
13. டில்லி நகரின் பழைய பெயர் யாது?
14. காடுகள் அதிகம் உள்ள மாநிலம் எது?
15. ஐ.நா. சபைக்குத் தலைமை வகித்த ஒரே இந்திய பெண்மணி யார்?
16. "குவாண்டம் தியரி"யைக் கண்டுபிடித்தவர் யார்?
17. பென்சிலின் எதிலிருந்து தயாரிக்கப்பட்டது?
18. ஆங்கில செய்யுளின் தந்தையாக கருதப்படுபவர் யார்?
19. குடியரசுத் தலைவரால் மாநிலங்களின் சபைக்கு நியமனம் செய்யப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கை எத்தனை?
20. சூரியனுக்கு மிக அருகில் உள்ள கிரகம் எது?
21. அஸ்டிக்மட்டிசம் என்ற நோயினால் பாதிக்கப்படும் உறுப்பு எது?
22. 'சிரிப்பு வாயு' என்பது யாது?
23. ஹோமியோபதி மருத்துவ முறைகள் கண்டுபிடித்தவர் யார்?
24. 1996 ஒலிம்பிக் போட்டி நடைபெறும் நாடு எது?
25. பில் கிளிண்டன் அமெரிக்க நாட்டின் எத்தனையாவது ஜனாதிபதி ஆவார்?

## விடைகள்

1. வங்காள கெசட்
2. செங்கடல் மற்றும் மத்திய தரைக்கடல்
3. குறுமணல்
4. உத்திரபிரதேசம்
5. அப்சரா
6. குல்டிப்நாயர்
7. நா. பார்த்தசாரதி
8. டிசம்பர் 10
9. 14
10. டிடபல்யு. ஐசனோவர்.
11. மாணிக்கவாசகர்.
12. ரேசியாபேகம்
13. இந்திரபிரஸ்தம்
14. மத்தியபிரதேசம்
15. பண்டிட் விஜயலட்சுமி
16. மாக்ஸ் பிளாண்க்
17. பூஞ்சை
18. சாசர்
19. 12
20. புதன் (மெர்குரி)
21. கண்
22. நைடரஸ ஆகஸைடு
23. ஹனேமன்
24. அட்லாண்டா
25. 42வது ஜனாதிபதி




## அமெரிக்க ஜனாதிபதி - கிளிண்டன் வெற்றி - கருப்பர்களுக்குக் கிடைத்த வெற்றி.

எந்த நாட்டுக்கு யார் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப் பட்டாலும் எந்த நாட்டுக்கும் கவலை இல்லை. ஆனால் அமெரிக்க நாட்டுக்கு மட்டும் முக்கியத்துவம். கடந்த ஒரு மாத காலமாக உலக நாடுகளின் கண்கள் அனைத்தும் அமெரிக்க நாட்டின் அரசியலைப் பற்றியே கவலையாக இருந்தது. காரணம் ஜனாதிபதி தேர்தல். இந்த தேர்தலில் 10 கோடி வாக்காளர்கள் வாக்களித்தார்கள். இது மொத்த வாக்காளரின் 55 சதவிகிதம்தான். அமெரிக்கத் தேர்தலில் 10 கோடி பேர் வாக்களித்தது இதுவே முதல் முறையாகும். இந்திய நாட்டில் நடைபெறும் தேர்தலைப் போல, வாக்குச்சாவடிக்குச் சென்று ஓட்டுப் போட்டு வந்துவிடுவது போல் இல்லை அமெரிக்கா நாட்டில். இந்த நாட்டில் 4 வகை வாக்களிப்பு முறை உண்டு. 1. பட்டி தொட்டிகளில் வைக்கப்படும் வாக்குப்பெட்டி. 2. வாக்குப்பதிவு எந்திரம். இந்த எந்திரத்தில் உள்ள ஒரு கைப்பிடியைப் பிடித்து இழுக்க வேண்டும். தானாக வாக்குப் பதிவாகி விடும். 3. கணிகளில் உள்ள பித்தானை அமுக்கினால் போதும். 4. மின்னணுக் கருவிகள். இதிலும் பித்தானை அமுக்கினால் போதும்.

இப்படி நடைபெற்ற தேர்தலில் கிடைத்த வாக்குகளில் அதிக வாக்கெடுத்து வெற்றி பெற்றவர் கிளிண்டன். இவருக்கு வயது 46. மனைவியின் பெயர் கிளாரி. ஒரே ஒரு மகள். வயது 12. கிளிண்டனுக்குக் கிடைத்த வெற்றி கறுப்பு இன மக்களுக்குக் கிடைத்த வெற்றியென ப்ரவலாகப் பேசிக் கொள்கிறார்கள். இவர் அமெரிக்க நாட்டின் 42வது குடியரசுத் தலைவர்.

# முன்னேற வழி



## இலாபம் தரும் காளான் வளர்த்து பணம் குவியுங்கள்

சமீப காலமாகக் காளான் வளர்ப்பும், காளான் உணவும் மிகப் பிரபலமடைந்துள்ளது. கிராமப் பகுதியில் கையால் சீண்டிக்கூடப் பார்க்காத காளான்கள் பட்டணக்கரைகளில் பணத்தைக் கைநிறையச் சம்பாதித்துக் கொடுக்கின்றன. காளான்கள் 'மழைக் குடை' அல்லது 'நாய்க்குடை' என்று கிராமங்களில் அற்பமாக நினைக்கப்படுபவை, நகரங்களிலே ஆடம்பர உணவகங்களில் அற்புதமான உணவாக விற்பனை யாகின்றது! 'மஷ்ரூம் சூப், மஷ்ரூம் கர்றீ' என விதவிதமாகத் தயாரிக்கப்படுகின்றன. சாதாரண மரக்கறி, பழங்களை விடப் பல மடங்கு சத்துள்ள 'காளான் உணவு' அசைவ உணவைவிடப் புரதச் சத்துள்ளது ஆகும். அவற்றில் இயற்கையாக அமைந்துள்ள மருத்துவ குணத்தையொட்டி; பல்வேறு மருந்துகள் தயாரிக்கவும் காளான்கள் பயன்படுகின்றன. சர்க்கரை நோயாளிகளுக்குக் காளான் மிகச் சிறந்த உணவாகும். மழைக்காலங்களில் இயற்கையாக முளைக்கும் காளான்களில் சில விஷத்தன்மை உடையவை. எனவே இதையறியாது, கண்ட 'காளான்களைப் பறித்துச் சாப்பிட முனையக் கூடாது! செயற்கை முறையில் வளர்க்கப்படும் காளான்கள் நச்சுத்தன்மை இல்லாதன வாகும். தற்போது ஒரு கிலோ காளான் 50 ரூபாயிலிருந்து 80 ரூபாய் வரை விற்பனை விலையினை எட்டியுள்ளதுடன், காளான்கள் வெளிநாட்டு ஏற்றுமதி வாய்ப்பினையும் பெற்றுள்ளன. ஒரு கிலோ காளானை உற்பத்தி செய்வதற்குப் பதினைந்து ரூபாய் மட்டுமே செலவாகும். வீட்டிலேயே காளான் வளர்த்துக் கை நிறையப் பொருளீட்டலாம். அவற்றின் அறுவடைக் காலம் முப்பது நாட்களாகும்.

இனி செயற்கை முறையில் காளான் வளர்ப்பது எப்படி எனத் தெரிந்து கொள்ளுங்கள்.

செயற்கை முறையில் காளான் தயாரிக்கத் தேவையானவை: 1. காயந்த வைக்கோல் 2.60 செ.மீ. உயரம், 30 செ.மீ. அகலமுள்ள ஒரு பாலிதீன் பை, 3. நுனி கூர்மையான மூங்கில் குச்சி, 4. ட்வைன் நூல், 5. டெட்டால் அல்லது பொட்டாசியம் பர்மாங்கனேட், 6. வித்துப்புட்டி, 7. பெஞ்சு, 8. சாக்குப்படுதா.

செய்முறை:

வைக்கோலைச் சிறுசிறு துண்டுகளாக வெட்டிக் கொண்டு சுமார் மூன்று அல்லது நான்கு மணிநேரம் வரை தண்ணீரில் ஊறவைக்க வேண்டும். நன்றாக ஊறியவுடன் வைக்கோலை எடுத்து, ஒரு பானையில் போட்டு நன்றாக வேக வைக்க வேண்டும். சிறிது தண்ணீர் ஊற்றி அடுப்பில் நன்றாக எழுப்பவும். கொதி நிலையை அடைந்தவுடன், அதில் உள்ள கிருமிகள் அழிந்துவிடும். நன்றாக வேகவைக்கப்பட்ட வைக்கோல் அதிகம் ஈரமில்லாமல், அதிகம் காய்ந்துவிடாமல் பாதுகாக்க வேண்டும். ஒரு வித்துப்புட்டிக்கு மூன்று உருளை வீதம் செய்யலாம். வித்துப்புட்டியில் உள்ள விதைகளை டெட்டால் போட்டுக் கழுவிய மூங்கில் குச்சியால் கிளறி மூன்று கிண்ணங்களில் கொட்டிக் கொள்ள வேண்டும். பிறகு பாலிதீன் பையை எடுத்து, புடவைக் கொசுவம் போல அடிப்பாகத்தில் மடித்து ட்வைன் நூலால் கட்டிவிட்டால் உருளைபோல வடிவம் வந்துவிடும். பின், வைக்கோல்களை எடுத்து அடுக்கு முறையில் படுக்கை தயாரிக்க வேண்டும்.

அடுக்கு முறைப்படி தயாரிப்பது:

பாலிதீன் பையைத் தரையில் வைத்து (அடிப்பாகத்தை) பையின் மேல்பாகம் வாய்திறந்து இருக்குமாறு செய்து அடிப்பாகத்தை நூலால் கட்டிவிட வேண்டும். பின் 5 செ.மீ. உயர அளவில் வைக்கோலைப் பரப்பவேண்டும். காளான் புட்டியில் உள்ள வித்துக்களை வைக்கோல் மீது ஓரங்களில் இலேசாகத் தூவி, நடுப்பாகத்தில் அதிகமாகத் தூவவேண்டும். இரண்டாவது அடுக்கு 10 செ.மீ. வைக்கோலைப் பரப்பி விதைகளை முதலில் செய்தது மாதிரி தூவ வேண்டும். இதே முறையில், ஐந்து அடுக்குகளாக வைக்கோல் துண்டையும் காளான் வித்தையும் போட்டுப் படுக்கைகளைத் தயார் செய்ய வேண்டும். ஐந்தாவது அடுக்கின்மேல் காளான் வித்தைத் தூவியவுடன் அதன் மேல் ஐந்து செ.மீ. உயரத்திற்கு மீண்டும் வைக்கோல் துண்டுகளைப் போட்டு, நன்றாகப் பரப்பிவிட்டு, பாலிதீன் பையின் மேல் நுனியை நூலால் கட்டிவிடவும். இதை வீட்டின் ஒரு அறையில் பெஞ்சு இருந்தால் தலை கீழாகப் போட்டு, சுற்றிலும் சாக்குப் படுதா கட்டி மேலேயும் படுதாவால் மூடிச் சுற்றிக் கட்டி விடவேண்டும். இதன் பின்னர், விதைக்கப்பட்ட நான்காவது நாளிலிருந்து தினந்தோறும் பூவாளி ஒன்றின் உதவியால் ஈரம் இருக்கும் வண்ணம் தண்ணீரைத் தெளித்து வர வேண்டும். எந்தக் காரணத்தை முன்னிட்டும் தண்ணீரை மளமளவென்று ஊற்றக்கூடாது.

காளான் விதைகளை இட்டுப் பேணிப் பாதுகாக்கப்பட்டு வளர்ந்து வ்ரும் காளான் பயிரானது, கிட்டதட்ட பன்னிரண்டு நாளிலிருந்து பதினைந்து நாட்களுக்குள்ளாக காளான்கள் வளர்ந்து விரிய ஆரம்பிக்கின்றன.

இவ்வாறு காளான்க்ளை வளர்க்கலாம். பெரிய லாபத்தையும் அடையலாம்.

பானுமதி குருசா

# கவிதைப் பூங்கா



### விடிவெள்ளி

"அம்பாவதே" என்னும் ஊரில்
அவதரித்த விடி வெள்ளியே!
முடமாக இருந்த எம்

சமுதாயக் குழந்தைக்கு
முத்தடுப்பு ஊசி நீ!
நீ பிறக்க வில்லை என்றால்?
நாங்கள்!
ஏழ்மையெனும்
இளம்பிள்ளை வாதத்தால்
முடமாகிப் போயிருப்போம்.

நீ பிறந்தாய்
நாங்கள் வளர்ந்தோம்;
இல்லையென்றால்?
நாங்கள் நிமிர்ந்து நடக்கும்
இந்த நிலை
பெற்றிருக்க மாட்டோம்!
குனிந்து, மிக குனிந்து
நான்கு கால் பிராணிகளாய்
நடமாடும் நிலையிலேயே
இருந்திருப்போம்!

உழைத்தே சலித்த எம்
சமுதாயத்திற்கு
சட்டமெனும்
சத்துணவு தந்தவனே!

ஓராயிரம் ஆண்டுகளாய்
சாதியெனும் விஷப்பயிரை
ஒழிக்க இயலாது
பலரும் முயன்றார்

அதை ஒரே நூற்றாண்டில்
ஒழித்துக் கட்டியவனே!

சாதிவெறி மாடுகளை
சட்டமெனும் சாட்டையால்
ஓங்கி அடித்தவன் நீ!

நீ தந்த
சட்டத்தால் தான் - இன்று
நாங்கள் பட்டம்; பதவி பெற்றோம்!

சட்டங்களை இயற்ற
சட்டசபை நுழைய
முடிவது நீ தந்த
சட்டத்தின் விளைவே தான்!

ப.ல. பரசுராமன்

### விடியல்

மாடுகட்டி வண்டி இழுத்தால்
மாடு இளைக்கும் என்று
மனிதனைச் சுமக்க வைத்து
மண்மேட்டை நிறைத்த
ஆதிக்க சாதிகளின்
அதிகாரக் குரல்கள்
சோளக் கூழுக்காக சோர்ந்து நிற்கும்
உழைத்தே உளுத்த உத்தமரைப் பார்த்து
'என்னடா நேரமாச்சு
இதற்குள் சாப்பாடு'
இவனோ
மூன்று வேளை உண்டதில்லை
முழுவயிற்றுக்கு உணவு கண்டதில்லை
உழைத்தே உதிரும் இவர்கள் வாழ்வில்
உணவுக்கே போராட்டம்

இரவில் இவன் மகனோ
மாட்டுக் கொட்டகையில்
மண்ணெண்ணை விளக்கேற்றி
ஏட்டை புரட்டுகிறான்
எதிர்வரும் விடியலைநோக்கி.

சா. முனியமுத்து
தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் மன்றம்
ஆட்சிப்பாக்கம் கிளை.

### அடுத்த இதழில்

சமுதாயத்தலைவர்கள் ஒன்றுபட வழி - பலரின் பேட்டி
முதல் பேட்டி அளிப்பவர் சிந்தனை செல்வர் உயர்திரு வி. பலராமன்.

வந்தவாசிக்கு அருகில் பொன்னூர் கிராமத்தில் ஆதிதிராவிடர் பாதிப்பு
காவல்துறையின் அராஜகம்
எம்.எல்.ஏ. வின் மௌனம்
விளக்கமான ரிப்போர்ட்
எதிர்பாருங்கள்.

# அமைப்பின் நிகழ்ச்சிகள்

## ஊத்தங்கரை காவல்துறை சப்-இன்ஸ்பெக்டரின் இன வெறி

தர்மபுரி மாவட்டம் ஊத்தங்கரையில் பல்லாண்டு காலமாக மருத்துவ சேவை செய்து மக்களால் போற்றப்பட்டு வரும் டாக்டர் நடேசன் என்பவர் கிருஷ்ணகிரி சாலையில் கிளினிக் வைத்திருக்கின்றார். இவரது கிளினிக் பக்கத்தில் செட்டியார் இனத்தைச் சார்ந்த முன்னாள் பிளாக் டெவலப்மெண்ட் ஆபிசர் பாலகிருஷ்ண செட்டியார் வாழ்ந்துக் கொண்டு வருகின்றார்.

9.11.1992 அன்று இரவு சுமார் 8.30 மணி அளவில் கிளினிக் உள்ளே சென்று டாக்டரை தகாத வார்த்தைகளால் பேசி, சாதியைத் தரக்குறைவாக பேசியுள்ளார். அதே நேரத்தில் தாக்கவும் சென்றுள்ளார். இதில் என்ன வேடிக்கை என்றால் டாக்டர் அமைதியானவர். ஆதி திராவிட இனத்தைச் சார்ந்தவர். பாதிக்கப்பட்ட டாக்டர் உடனடியாக ஊத்தங்கரை சப்-இன்ஸ்பெக்டர் அவர்களிடம் புகார் கொடுத்து இருந்தும் இந்நாள்வரை எவ்விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதற்கு காரணம் சப்-இன்ஸ்பெக்டர் சாதி வெறிப்பிடித்தவர் என்பது பொது மக்களால் அழைக்கப்படும் பட்டப் பெயராகும்.

இது சம்மந்தமாக தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் மன்றத்தினர் தீவிர நடவடிக்கை எடுக்கக்கோரி மாநிலத் தலைவரை அணுக, அவரும் சேலம் மாவட்ட அமைப்பாளர் சி. கோவிந்தன் அவர்களும் பி.சி.ஆர் துறையின் டி.ஐ.ஜி அவர்களிடம் புகார் மனு கொடுக்கப்பட்டு செட்டியாரை தீண்டாமை ஒழிப்புச் சட்டப்படி கைது செய்ய வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. இருந்தாலும் சப்-இன்ஸ்பெக்டரின் மெத்தனப்போக்கு காவல்துறை மீது அவநம்பிக்கையை ஆதி திராவிட இன மக்களிடையே உருவாக்குவதுபோல் உள்ளது.

மாவட்ட காவல்துறை அதிகாரி அவர்கள் இப்படிப்பட்ட காவல்துறை அதிகாரி 4 ஆண்டுகளுக்கு மேல் ஒரு காவல்துறை நிலையத்தில் பணி ஆற்றுவது என்பது காவல்துறைக்கு அவப்பெயரை உருவாக்கும். எனவே இவரை மாற்றம் செய்ய கோரிக்கை விடுவதோடு, மேலும் நடவடிக்கை எடுக்கவில்லையெனில் தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் மன்றம் போராட்டக் களத்தில் இறங்கவும் தயங்காது.

நமது நிருபர் - தர்மபுரி மாவட்டம்

## மன்றம் எடுத்து முடித்த நடவடிக்கை

தென் ஆர்க்காடு மாவட்டம் விழுப்புரம் நகர காவல் நிலையத்தில் திரு ஓயிட் என்பவர் இன்ஸ்பெக்டராகப் பணியாற்றி வருகின்றார். தற்சமயம் நகர மக்களால் பாராட்டப்படுகின்ற நல்ல இன்ஸ்பெக்டர்.

விழுப்புரம் 10வது வார்டு கீழ்பெரும்பாக்கம் ஏரிக்கரைமேடு வேலிக்காத்தா காடுகளுக்கு மத்தியில் ஏரிக்கரையிலே குடிசை வீடுகள். ஆதி திராவிட மக்கள் சுமார் 30 ஆண்டு காலமாக பட்டா இல்லாமல், விளக்கில்லாமல், குடிக்க தண்ணீர் இல்லாமல், குளிருக்கும் மத்தியிலே வாழ்கின்ற மக்கள் கூலிக்குப் போனால்தான் சாப்பாட்டிற்கே வழி. இக்கிராமத்தில் அர்சுணன் என்பவர் மிகவும் ஏழை. பக்கத்திலுள்ள எருமந்தாங்கல் கிராமத்தில் வாழ்கின்ற அனந்தஜெயன் (40 வயது) கதிரவன் (30 வயது) இவர்கள் ஜாதி இந்துக்கள். இவர்கள் இருவரும் அர்சுணன் என்பவரை கத்தியால் வெட்ட கையில் பலத்த அடிபட்டு விட்டது. தட்டிக் கேட்க பயந்து போன அர்ச்சுணனை தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் மன்ற கிளை மன்ற தலைவர் அ. கலியமூர்த்தி என்னிடம் கொண்டு வந்தார். நான் இது சம்மந்தமாக மாநிலத் தலைவரிடம் எடுத்துச் சொல்லி காவல் துறை உயர் அதிகாரிகளுக்கு முறையாக முறையீடு செய்ததன் விளைவாக சட்டம் ஒழுங்கை சீராக பாதுகாத்து வரும் இன்ஸ்பெக்டர் திரு. ஓயிட் அவர்கள் இருவரையும் கைது செய்து நடவடிக்கை எடுத்து ஆதிதிராவிடர் இன மக்களுக்கு நீதியை நிலைநாட்டியவருக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

கே. பாலு, விழுப்புரம் நகரத்தலைவர்.

விழுப்புரம் நகரில் வாழ்கின்ற ஆதிதிராவிட இன மக்களின் பல்லாண்டு கால குறைகளைப் போக்கும் வண்ணம் 28.10.92 அன்று தென் ஆர்க்காடு மாவட்டத்திற்கு வருகை தந்து கடலூரில் மாவட்ட ஆட்சித்தலைவர், மாவட்ட நல அதிகாரி (ஆந) ஆகியோரை நேரில் சந்தித்து குறைகளைப் போக்க வழிவகை செய்த மாநிலத்தலவருக்கு நகர கிளை மன்றங்களின் சார்பாக நன்றியைத் தெரிவிப்பதோடு கோரிக்கை நிறைவேறாவிட்டால் உண்ணாவிரதம் இருப்பதாகவும் விழுப்புரம் நகர கிளை மன்றங்கள் ஏற்பாடு செய்து வருகின்றன.

தேவதாஸ், நகர செயலாளர், விழுப்புரம்.

### சேலம் மாவட்டம :

சேலம் மாவட்டம் ஓமலூர் வட்டத்தில் கஞ்சநாயக்கன்பட்டி எனம் கிராமம். இக்கிராமத்தில் 1000-க்கும் மேற்பட்ட வன்னியர் வீடுகள். விரல்விட்டு எண்ணக்கூடிய அளவில் ஆதி திராவிடர் குடியிருப்பு. மாடு பள்ளத்தில் விழுந்து விட்டதால் ஏற்பட்ட வாய்ச்சண்டை ஜாதிக் கலவரமாக உருவெடுத்து ஆதி திராவிடர்கள் பாதிக்கப்பட்டனர். நீதி வேண்டி ஓமலூர் தாசில்தார் அலுவலகத்தில் அமைதிக்குழு



நடைபெற்றது. இந்த குழுவில் டி.ஆர்.ஓ. தாசில்தார், தீப்பெட்டிபட்டி காவல்துறை துணை ஆய்வாளர் அவர்கள், சேலம் மாவட்ட அமைப்பாளர் சி. கோவிந்தன், ஓமலூர் ஒன்றிய தலைவர் ராமு, மாநிலத் தலைவர் அம்பேத்கர்பிரியன் மற்றும் ஜாதி இந்துக்கள் கலந்துக் கொண்டனர். இதில் ஒரு வியப்பு! சுதந்திர நாட்டில் இக்கிராம ஜாதி இந்துக்கள் காவல்துறைக்கே சென்றதில்லையாம். அனைவரும் சமானதானப்படுத்தப் பட்டு பல்லாண்டு காலம் அடிமையாக இருந்த ஆதி திராவிடர்களுக்கு அன்றுதான் சுதந்திரம் கிடைத்தது. சப்-இன்ஸ்பெக்டர் நீதிக்குப் போராடியது பாராட்டத்தக்கது.

### தர்மபுரி மாவட்டம்.

ஓமலூர் அமைதிக்குழுவை முடித்துக்கொண்டு பேராசிரியர் தர்மபுரி மாவட்டம் ஓமலூர் நீதிக்கேட்டு 8 நாட்கள் தொடர்ந்து நடந்து வந்த உண்ணாவிரதத்தை முடித்து வைக்கவும், அமைதிக்குழுவில் பங்கேற்கவும் ஒசூர் வட்ட தாசில்தார், டி.எஸ்.பி., பி.டி.ஓ மற்றும் மாநிலத்தலைவர், இ. வெங்கடேஷ், தனி வட்டாரத் தலைவர் கிருஷ்ணப்பா, ராமகிருஷ்ணன் ஆகியோர் கலந்துக் கொண்டனர். அமைப்பின் கோரிக்கைகளை ஏற்று நிறைவேற்றப்பட்டது. அதனைத் தொடர்ந்து இரவு 12.00 மணி அளவில் உண்ணாவிரதத்தை முடித்து வைத்தார் மாநிலத்தலைவர் அவர்கள்.

### செங்கை எம்.ஜி.ஆர். மாவட்டம்

வாலாஜாபாத் தாலுகாவில் ஏலக்காய்மங்கள கிராமத்தில் ஏற்பட்ட ஜாதிக்கலவரம் மற்றும் பெரியேரி, சித்தேரி கூடந்தாங்கல் ஏரி நீர் பாசன தகராறு சம்மந்தமாக எழுப்பப்பட்ட பிரச்சினைக்கு முடிவு காண காஞ்சிபுரம் தாலுகா அலுவலகத்தில் 31.10.1992 அன்று அமைதிக்குழு கூட்டப்பட்டது. இதில் மாநிலத்தலைவர் அம்பேத்கர்பிரியன், குணசேகரன், குணாளன், கோபால் த/பெ. மதுரை, மதுரை த/பெ. முத்தன் மற்றும் எதிர்தரப்பிலிருந்து பலர் கலந்துக் கொண்டனர். இந்த அமைதிக்குழுவில் ஆர்.டி.ஓ., தாசில்தார், சப்-இன்ஸ்பெக்டர் ஆகியோர் கலந்துக் கொண்டனர். இதில் ஏரி நீர் பாய்ச்சுவதில் இரண்டு ஜாதிக்காரர்களையும் நியமிக்க மாநிலத்தலைவர் வேண்டுகோள் விட அதை எதிர்தரப்பினர் ஏற்றுக்கொள்ளாதக் காரணத்தால் அமைதிக்குழு எவ்வித முடிவும் எடுக்காமல் முடிந்தது. இருந்தாலும் தீண்டாமை ஒழிப்புச்சட்டப்படி கைது செய்வதற்கு அமைதிக்குழு வழிவகை செய்தது.

### ஈஞ்சம்பாக்கம்

ஆதி திராவிட இன மக்களுக்கும், மீனவர் பெருமக்களுக்கும் ஈஞ்சம்பாக்கத்தில் ரேஷன் கடையில் ஏற்பட்ட வாய்ச்சண்டை கலவரமாக மாறியது. இருதரப்பினரையும் இணைக்கும் முயற்சியில் இரண்டு பிரிவு தலைவர்களும் முயற்சித்தனர். இதன் முடிவாக அமைதிக்குழு தீபாவளி அன்று கூட்டப்பட்டது. இதில் மீன் வளர்ச்சித்துறை தலைவர் ஜெ. பாலன், தாம்பரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.எம். கிருஷ்ணன், அமைப்பின் சார்பாக மாநிலத்தலைவர், துணைப்பொதுச்செயலர் புத்ததாசன், பி. ஆர். ரகுநாதன், அண்ணாதுரை மற்றும் கிராமத்தில் உள்ள அனைத்துக் கட்சித்தலைவர்கள் ஊர் மக்கள் கலந்துக் கொண்டனர். காவல்துறையின் சார்பாக துரைப்பாக்கம் காவல்துறை இன்ஸ்பெக்டர் சௌந்தரராஜன் கலந்துக் கொண்டு இரண்டு பிரிவினரையும் சமாதானப்படுத்தி இரண்டு பிரிவினர்களும் கைகோர்த்து குலுக்க அமைதிக்குழு வெற்றியோடு முடிந்தது. இதனால் பல்லாண்டு காலமாக இருந்த பகைமை குணம் மாற்றப்பட்டது என்றே சொல்லலாம்.

## தந்தை சிவராஜ் நூற்றாண்டுவிழா ஒரு கண்துடைப்பே

ஈ.வே.ரா அவர்களுக்கு "பெரியார்" என்று பெயரிட்டவர் மீனாம்பாள் சிவராஜ் என்றும், சென்னை மாநகராட்சியின் மேயராக இருந்து நலலபணியாற்றியவர் தந்தை சிவராஜ் என்றும் அப்படிப்பட்டவரின் நூற்றாண்டு விழாவினை தமிழக அரசு சிறப்பாக ஓராண்டு கொண்டாடும் என்றும் தமிழக முதல்வர் அவர்கள் சட்டமன்றத்தில் பேசும் பொழுது குறிப்பிட்டார். இந்தச் செய்தி பத்திரிகைகளில் படிக்கும்

பொழுது டாக்டர் அம்பேத்கர் அவர்களின் கொள்கைகளை ஏற்றுக்கொண்ட ஏராளமான இளைஞர்கள் பெருமைப் பட்டதுண்டு. காரணம் டாக்டர் அம்பேத்கர் அவர்களின் நூற்றாண்டு நிறைவில் அவரது தலைவர் தந்தை சிவராஜ் அவர்களுக்குத் தொடர்ந்து நூற்றாண்டு விழாவா என நினைத்த உள்ளங்கள் ஏராளம். தமிழக முதல்வர் செட்யூல்டு இன தலைவர்கள் மீது அக்கறைக்கொண்டுள்ளார் என நினைத்து இந்த சமுதாயம் ஒரு நிமிடம் ஆனந்தக்கண்ணீர் சிந்தியது. ஆனால் ஓராண்டு நிறைவுற்றும் இதுவரையில் தமிழக அரசு தந்தை சிவராஜ் அவர்களின் நூற்றாண்டினை எந்த வகையில் கொண்டாடியது என்பது கேள்விக்குறியே. இது சம்மந்தமாக குடியரசுக்கட்சி சட்டமன்ற உறுப்பினர் சே.கு. தமிழரசன் அவர்கள் 'நூற்றாண்டு விழா' குழுவில் உறுப்பினராக இருந்தும் வாய்மூடி மவுனம் சாதிப்பது ஏன்?

தமிழக அரசு 'நூற்றாண்டுவிழா'வைத் தொடர்ந்து கொண்டாடவில்லை யென்றாலும் தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் மன்றம் தந்தை சிவராஜ் அவர்களின் நூற்றாண்டு விழாவினை கிராமந்தோறும் கொண்டாடிக்கொண்டுதான் இருக்கிறது. இனிமேலாவது தமிழக அரசு தந்தை சிவராஜ் அவர்களுக்கு! சிலை வைத்து நூற்றாண்டு விழாவினை முடித்து வைக்குமா?

பி.ஆர். இரகுநாதன், சென்னை.

There has been many Mahatmas in India. Whole sole object was to remove untouchability and to elevate and absorb the depressed classes, but every one of them has failed in his mission. Mahatmas have come, Mahatmas have gone, but the untouchables have remained as untouchables.

- Id-326




சூரியன் கடலில் இருந்து குளித்து விட்டு பூமிக்கு வருவது போல் உதயம் ... கொக்கரக்கோ எனும் கோழிகளின் சங்கீதம் பெண்களெல்லாம் தெருக்களில் சாணி தெளித்து சுத்தம் செய்யும் காட்சி ஒரு பக்கம். கொடுமையான குளிரையும் பொருட்படுத்தாமல் சேற்றிலே ஏர் உழும் விவசாயிகளின் ஏற்றப்பாட்டு தென்றலோடு தென்றலாக வீசுகின்றது. முத்தன் பாவம் ஏழை விவசாயி. பரமசிவம் பண்ணையிடம் கொத்தடிமையாக வேலை செய்பவன். உழைப்பதைத் தவிர சாமி சாமி என்று அடிக்கடி சொல்வதைத் தவிர வேறு ஒன்றும் அறியாதவன். கம்பளியை எடுத்து போர்த்திக் கொண்டு 'ஆண்ட' வீட்டு கொட்டகையிலுள்ள மாடுகளை மந்தைக்கு ஓட்டிச் செல்ல பொடி நடையாக செல்கின்றான்.

டேய் முத்தா... "அடிக்கிற குளிரில் எங்கடா போயிட்டு இருக்க... வாடா... சூடா ஒரு டீ சாப்பிடு" என்ற குரல் ஒரு டீக்கடையிலிருந்து வருகின்றது. முத்தன் திரும்பிப் பார்த்தான். டீக்கடையிடம் சென்றான். டீக்கடை சொந்தக்காரர் வேலுசாமி நாயக்கர் தான் முத்தனைக் கூப்பிட்டார்.

"ஏங்க சாமி நாளைக்கு பைசா தரட்டுமா" என்றான் முத்தன்.

"அட என்னடா பைசாவுக்கு போயிட்ட இன்னிக்கு இருக்கிற மனுசன் நாளைக்கு இல்ல... அதோ அந்த கிளாச எடுத்து கழுவிட்டு வா. டீக்கடை எரவாணத்தில் மாட்டியிருக்கும் கிளாஸை எடுத்துச் செல்ல நாயக்கர் தண்ணீர் ஊற்ற முத்தன் கழுவிய பிறகு டீ ஊத்தப்படுகிறது. முத்தன் டீயோடு ஒரு கல் மீது உட்காருகின்றான்.

"டேய் அந்த கிளாஸப் பிடுங்கி உடைங்கடா" என்ற குரலோடு பத்து நபரோடு வருகின்றான் பீம்ராவ். இவன் தான் முத்தனின் ஒரே மகன் படித்தவன். பட்டம் பெற்றவன் படிப்பை முடித்து விட்டு வேலை கிடைக்காததால் அம்பேத்கர் மன்றம் உருவாக்கி நல்லது கெட்டது அறிந்து சமூக சேவை செய்பவன்.

"டேய் ஏன்டா கிளாஸ உடைக்கச் சொல்ற" என்றார் நாயக்கர்.

"டீக்கடையில தனி கிளாஸ் வெச்சா சட்டப்படி குற்றம்" என்றான் கூட வந்த ராமன்.

"ஆமா, இவரு நக்கீரன் பரம்பரை குற்றத்த கண்டுபிடிச்சிட்டாரு" என்றார் நாயக்கர்.

"தோ பாருங்க நாங்களும் மனுஷனுங்கதா. நாய முத்தம் கொடுக்கிற மனுஷன் எங்களைப் போன்ற மனிதனை தொட்டா தீட்டுனு சொல்ற நம்ம ஊர் டீக்கடையில தனி கிளாஸ்ல டீ கொடுக்கிறதால யாரும் டீ குடிக்கக் கூடாதுட ஊர்ல தீர்மானம் போட்டாச்சு. அதை மீறி யாரு டீ குடிச்சாலும் அவங்களை சும்மா விடாது இந்த அம்பேத்கர் மன்றம்" என்றான் பீம்ராவ்.

"டேய் பீம்ராவ் டீ குடிக்கிறவரு உன் அப்பா.

"யாரா இருந்தா என்ன"?

ஏங்க சாமி! அவனோட நீங்க ஏன் பேசறீங்க. தோ பாருங்கப்பா டீ குடிக்கக் கூடாதுனு சொல்லிட்டமங்க. குடிக்க மாட்டேன் என்றான் முத்தன். அனைவரும் அமைதியாக செல்கின்றார்கள்.

"டேய் முத்தா என்ன திமிரு இருந்தா உன் பையன் இப்படி சொல்வான்" இரு! இரு! இத நாலு பேர்கிட்ட சொல்லி இதுக்கு ஒரு முடிவு கட்டாம விட மாட்டேன்" என்றான் நாயக்கர்.

அம்பேத்கர்பிரியன்

ஐயா, 'ஏதோ அறியாத பசங்க தெரியாம செய்துட்டாங்க. இத பெரிசுபடுத்தாம இப்படியே விடுங்க. நா அவனைப் பார்த்து பேசிக்கிறேன்' பயந்து போன முத்தன் பேசினான்.

இதுக்குத்தான்டா அந்தக் காலத்துல பரப்பசங்க படிக்கப் போனா மாடு மேய்க்க ஆளு கிடைக்க மாட்டாங்கனு பள்ளிக்கூடமே வேண்டாம்னு சொன்னாங்க. அது ஏன்னு இப்பத்தான் தெரியுது. நாலு எழுத்து படிச்சிட்டு இப்படி கலாட்டாப் பண்ற இவனுங்க அந்தக் காலத்தல படிச்சியிருந்தா மேல் வரப்பு எது கீழ் வரப்பு எதுனு தெரியாம போயிட்டியிருக்கும்.

என்ன சாமி எதை எதையோ பேசறீங்க அவனுங்க என்னத்தான சொன்னாங்க. நீங்க இப்படி கோபிச்சிக்கிறீங்க.

நாளைக்கு ஊர் பஞ்சாயத்தக் கூட்டி ஒரு முடிவு எடுக்காம விடமாட்டேன் என்று சபதம் போட்டார் நாயக்கர்.

முத்தன் பாவம் ஒழுங்கா போயிருப்பான். டீக்குடிக்க வந்து, பிரச்சினை பெரிசாயிடுச்சி முணு முணுத்தவாறு ஆண்ட வீட்டை நோக்கி சென்றான் முத்தன்.



பொழுது விடியும் நேரம்.

வேகமாக மாடுகளை மந்தைக்கு ஓட்டினான். சாணிகளை கூடையில் எடுத்துச் சென்று குப்பையில் கொட்டினான்.

முத்தா.. முத்தா.. உள்ளிருந்து ஒரு குரல் வந்தது.

உன் பையன் பீம்ராவை வீட்டுக்கு அனுப்பு அவங்கிட்ட தனியா பேச வேண்டி இருக்கு.

"சரிங்க அப்படியே அனுப்புறேங்க" என்று சொல்லி விட்டு வேகமாக கொட்டகை விட்டு வெளியே வந்தான்.



'அய்யா ... வந்துட்டேங்க' என்று அலறி அடித்துக் கொண்டு முத்தன் ஓடினான்.

"அய்யா கூப்பிட்டீங்களா" என்று பயபக்தியோடு மேலிருந்த துண்டை இடுப்பில் கட்டிக் கொண்டு, காலெல்லாம் கழுவாத சாணியோடு பயந்த வண்ணம் நின்றுக் கொண்டிருந்தான்.

"போச்சு... போச்சு... ஐயாவுக்கு எப்படியோ டீக்கடை தகராறு தெரிஞ்சு போச்சு" என்ன ஆவப்போவுதோ தெரியலையே என தனக்குள் தவித்தான் முத்தன்.

-தொடரும்.

## வருந்துகிறோம்

தர்மபுரி மாவட்ட அமைப்பாளர்
திரு. இ. வெங்கடேஷ் அவர்களின்
தந்தை எல்லப்பா அவர்கள் சில
மாதங்களாக உடல் நலம் சரி இல்லாமல்
இருந்து இறந்த செய்தியைக் கேட்டு
மாநில அமைப்பு தனது அஞ்சலியை
செலுத்திக் கொள்கின்றது. சமுதாய
நலனைக்கருதி ஒரு சிங்கத்தை உருவாக்கி
தந்த அப்பெரியவரின் மனம் சாந்தி
அடையட்டும். பெரியவரை இழந்து வாடும்
குடும்பத்தினருக்கு தமிழ்நாடு டாக்டர்
அம்பேத்கர் மன்றம் இரங்கலை
தெரிவித்துக் கொள்கிறது.

## வரவேற்கிறோம்

மாத இதழ் - நீலமலர்
ஆசிரியர் - வழக்கறிஞர் இராவணன்
விலை - தனிப்பிரதி ரூ. 2/
வெளியிடும் இடம் - திருவண்ணாமலை


ஏஜெண்டுகள் தேவை

"இந்திய சுடர்" விற்பனைக்கு
ஏஜெண்டுகள் உடனடியாகத் தேவை.
தொடர்பு கொள்ளவும்.

நிர்வாகி, இந்திய சுடர், இ21, வெங்கட்டாபுரம்
சைதாப்பேட்டை, சென்னை 600 015.

## செட்யூல்டு இன தலைவர்கள் ஒன்றுபட வழியுண்டா இதோ ஒரு முயற்சி

நவம்பர் மாதம் 1ம் தேதி காலையில் ஒரு சுவற்றில் திடீரென ஒரு போஸ்டரைப் பார்த்தேன். செட்யூல்டுஇன தலைவர்கள் ஒருங்கிணைப்பு. ஒரே வியப்பு! என்னதான் நடக்கும் என்று பார்வையிடச் சென்றேன்.

வந்திருந்த தலைவர்களைவிட பார்வையாளர்கள் சுமார் நூற்றுக்கும் மேற்பட்டோர் தலைவர்களில் நன்கு அறிந்த தலைவர்கள் என்று பார்க்கும்பொழுது திரு. சொல்லின் செல்வர் சக்திதாசன், டாக்டர் சேப்பன், தளபதி ஜான்பாண்டியன், வையாபுரி மற்றவர்கள் பெயரை தெரிந்துக் கொள்ளவில்லை. இக்கட்டத்தில் டாக்டர் சேப்பன் அவர்கள் பேசும்பொழுது.

கடந்த 30 ஆண்டு காலமாக தமிழகத்தில் பல கிராமங்களுக்குச் சென்று டாக்டர் அம்பேத்கர் கொள்கைகளை எடுத்துச் சொல்லிக் கொண்டுதான் வருகின்றேன். சமுதாய மக்கள் கொள்கைகளை ஏற்றுக் கொள்ளாமல் தலைவர்களை குறை சொல்வதும், அரசியல் கட்சித் தலைவர்களைத் துதிப்பாடுவதும் மனவேதனையைத் தருகின்றது. ஒரு இடத்தில் சமுதாய மக்களுக்கு ஏற்படும் கொடுமைகளையும் நேரில் சென்று பார்வையிடவும் நடவடிக்கை மேற்கொள்ளவும் தேவையான பணவசதி தலைவர்களிடத்தில் இல்லை. இது போன்ற நேரத்தில் தலைவர்களுக்கு உதவ யாரும் முன்வருவதில்லை என்று கூறி தனது சிற்றுரையை முடித்துக்கொண்டார்.

**ஆ. சக்திதாசன் :** நான் 40 ஆண்டுகாலமாக சமுதாயப் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றேன். என்னுடைய பணியில் அய்யா சொன்ன 'கற்பி' என்ற தத்துவத்தை நான் மிகச் சிறப்பான முறையில் செய்துக் கொண்டிருக்கிறேன். நம்முடைய உரிமைகளை அடைய வேண்டும் என்றால் ஒன்றுபட்ட போராட்டம் தேவை. அந்த போராட்டத்திற்கு ஜான் பாண்டியன் போன்ற தளபதிகள் இளைஞர்களை நல்வழிப் படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு தனது பேச்சை முடித்துக் கொண்டார்.

**தளபதி ஜான்பாண்டியன் :** கேட்பதாலும் கெஞ்சுவதாலும் நம்முடைய உரிமைகளை பெறமுடியாது. ஒன்றுபட்டப் போராட்டம் ஒன்றே நம் சமுதாயத்தின் அடிமைத்தனத்தை மாற்றிட முடியும் என்று டாக்டர் அம்பேத்கர் அவர்கள் சொனனதை மையமாக வைத்து இளைஞர்கள் ஆயுதம் ஏந்தி போராட தயாராக வேண்டும். இன்று இருக்கின்ற நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களை நாம் நம்புவது நம்மிடையே நாம் ஏமாற்றிக்கொள்வதாகும். சில அம்பேத்கர் துரோகிகள் என்னை என் சமுதாயத்திற்கு மட்டும் உழைப்பதாக பொய் பிரசாரம் செய்துக்கொண்டு வருகின்றார்கள். ஆனால் நான் அனைத்து செட்யூல்டு இன மக்களுக்கும் உயிர் கொடுக்க தயாராக இருக்கிறேன் என்று பேசினார். காலை 9.00 மணிக்கு ஆரம்பித்த கூட்டம் 2.30 மணியளவில் எவ்விதமான முடிவும் எடுக்காமல் முடிந்தது. அடுத்தக்கூட்டம் மதுரையில் கூட்டுவதாக முடிவு எடுக்கப்பட்டது.

மோரை - விக்டர்.

## ராஜாளி ரவுண்டப்

நமது "இந்திய சுடர்" இதழின் தலைமை நிருபராக ராஜாளியை நியமித்துள்ளோம். அவர் தனது வலிமையான சிறகுகளை அடித்து விர்ரென்று செய்திகளைச் சேகரித்து வருபவர். அவரது சூடான செய்திகள் இனி தொடர்ந்து வரும். இவ்விதழில் ...............

வேர்த்து விறுவிறுத்து வேகமாக அறைக்குள் வந்தார். ஒரு டம்ளர் தண்ணீ அடித்தார். வந்தது சூடு ஏதாவது செய்தி என்று வாய் திறப்பதற்குள் 11.00 மணிக்கு ராஜாளி பேரீஸ் கார்னர் பக்கம் சென்றார்.

ஒரு லாட்ஜில் இரண்டு சமுதாயத் தலைவர்கள் இளைஞர்கள் சந்தித்து பேசுவதாக கேள்விபட்டு சிறகை விரித்த ராஜாளி நோட்டம் காண ஜன்னல் பக்கம் சென்றார்.

ஒருவர் கர்நாடகா மாநிலத்திலிருந்து வந்திருந்த ஜகானிசங்கர். இவர் பிரஜா விமோசன சபாவின் மாநிலத் தலைவர். தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் மன்றத்தின் 3வது மாநில மாநாடு காஞ்சிபுரத்தில் நடந்தபோது தலைவர் அம்பேத்கர் பிரியனால் அழைக்கப்பட்டவர் என்று கேள்விபட்டேன்.

இவர்கள் இருவரும் தென்மாநில அளவில் ஒருங்கிணைப்பு உருவாக்கப் போவதாகவும், அதன் முதல்கட்ட கூட்டம் டிசம்பர் மாதம் 6ம் தேதி டாக்டர் அம்பேத்கர் நினைவு நாளில் பெங்களூரில் நடத்தப் போவதாகவும் திட்டம் தீட்டியுள்ளனார். இந்த விழாவில் ஆந்திரா, கர்நாடகா, பாண்டிச்சேரி, தமிழ்நாடு, கேரளா போன்ற தென் மாநில சமுதாயத் தலைவர்கள் கலந்துக்கொள்ள இருப்பதாக கேள்விப்பட்டேன்.

இப்படி தென்மாநில அளவில் ஒன்று சேர்ந்தால் அந்தந்த மாநிலத்தில் அரசியல் கட்சிகளுடன் கூட்டு வைத்துக் கொண்டு சமுதாயத்தை அடகு வைக்கும் கயநெஞ்சமுள்ளவர்களின் கொட்டம் அடக்கப்படுமல்லவா என்று கேள்விப் பட்டு பெருமூச்சு விட்டேன். நான் விட்ட பெருமூச்சின் சப்தம் கேட்டு அவர்கள் ஜன்னலை திறக்க, நான் சிறகை விரித்து, பறந்து வந்து விட்டேன் என்றார் நமது ராஜாளி.

## மன்ற தம்பிகளின் கவனத்திற்கு

இந்திய சுடர் இதழில் தொடர்ந்து வர உள்ள 'சட்டம் என்ன சொல்கிறது' எனும் பகுதியை பாதுகாத்துக் கொள்ளுங்கள். காரணம் சமுதாய சேவை செய்யும்போது உதவியாக இருக்கும். "இன்றைய செய்திகள் நாளைய வரலாறு".

- சிறப்பாசிரியர்.






## இதய நன்றி!

அண்ணல் அம்பேத்கருக்கு
அனைத்துலகம் போற்றிட,
அம்பேத்கர் மாவட்டம் தந்த
அழியா தமிழ்போல் வாழும்
அன்புத்தலைவர் கலைஞருக்கு
அன்பு உள்ளங்களின்
அழியா நன்றி!

— மாநில அமைப்பு
தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் மன்றம்.



தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் மன்றத்தின் தன்னலமற்ற பிரிக்கமுடியாத இரு சக்திகள்.

- ஆசிரியர்.

## நள்ளிரவில் ... வரலாறு போற்றும் சீர்திருத்தத் திருமணம்.

7.11.1992 அன்று விழுப்புரம் பகுதியில் 29வது வட்டத்தில் கிளை மன்றத்தைத் துவக்கி, கொடியேற்றி, இரவு பாடசாலைக் கட்டிடத்தைத் திறந்து வைக்க மாநிலத் தலைவர் பேராசிரியர் அம்பேத்கர்பிரியன் அவர்கள் வருகை தந்த போது அமைக்கப்பட்ட பொது மேடையில் எல்லோரும் அதிசயமாகும் வகையில் சீர்திருத்தத் திருமணம் நடைபெற்றது. பேராசிரியர் பொளத்த மந்திரத்தைச் சொல்லி மாங்கல்யம் எடுத்துக் கொடுக்க திருமணம் வரலாறு போற்றும் வகையிலே நடைபெற்றது.

மணமகன் : எஸ். சுந்தரம்

மணமகள் : பண்ருட்டி வட்டி பூண்டி கிராமத்தைச் சேர்ந்த செல்வி.

மணஇடம் : கே.கே. ரோடு முருகன் கோயில் திடல்.

பாலு, விழுப்புரம்

## வியாபார பெருமக்களே

இதோ ஒரு வாய்ப்பு!!
இந்திய சுடர் மாதமிருமுறை
சமுதாய ஏடு தமிழ்நாடு, ஆந்திரா,
கர்நாடகா போன்ற மாநிலங்களிலும்
பம்பாயில் தமிழர்கள் அதிகம் வாழ்கின்ற
பகுதிகளிலும் தீவிரமாக வளர்ந்து வருகின்றது.
அதோடு கிராம மக்களிடையே அதிக
தொடர்பினை உருவாக்கும் இவ்விதழில்
தங்களது விளம்பரத்தைக் கொடுத்து
வியாபாரத்தைப் பெருக்குங்கள்.

பின் அட்டை (2 வண்ணங்களில்) ரூ. 2,000/-
பின் அட்டை உள்பக்கம் ரூ. 1,500/-
முன் அட்டை உள்பக்கம் ரூ. 1,500/-
முழு பக்கம் உள்ளே ரூ. 1,000/-
அரைப்பக்கம் உள்ளே ரூ. 500/-

- நிர்வாகி 'இந்திய சுடர்' மாதமிருமுறை

## எழுத்தாளர் கவனத்திற்கு

### எழுத்தாளர் பொங்கல்

இந்திய சுடர் சிறப்பு மலராக திருநாளில் வெளிவர உள்ளது. எழுத்தாளர்கள் தங்களது படைப்புகளை உடனடியாக அனுப்பி வைக்கவும்.

- ஆசிரியர்


## அடுத்த இதழில்

முதல் இலண்டன் வட்டமேஜை மாநாட்டில் தான் அணிந்திருந்த கோட்டில் 'பறையன்' எனும் வாசகம் தாங்கிய பேட்ஜ் அணிந்து, 5ம் ஜார்ஜ் முன் தீண்டாமைக் கொடுமையை எடுத்துச் சொல்லி வீரமுழக்கமிட்ட, ராவ்சாகிப், திவான்பகதூர், ராவ் பகதூர், திராவிட மணி, 'தாத்தா ரெட்டைமலை சீனிவாசன்' வாழ்க்கை வரலாறு துவங்குகிறது.



தர்மபுரியில் நடப்பதென்ன? ......

# ஓசூரில் உண்ணாவிரதம் ஏன்?



அடுத்த இதழில்...

## பொன்னூர் விவகாரம்

மேற்கண்ட பிரச்சினைக் குறித்து "மனித நேய பாதுகாப்பு மாணவர் குழு" (டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக்கல்லூரி மற்றும் அனைத்துக்கல்லூர் பேரவை) நீதி கேட்டு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறார்கள். இவர்களது போராட்டம் வெற்றி அடைய பொதுமக்கள் ஆதரவு தரும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

- சிறப்பாசிரியர்




தமிழில் தொண்ணூற்றாறு வகை பிரபந்தங்கள் உண்டு. அவற்றுள் 'உலா' என்பதும் ஒன்று. பிரபந்தம் என்பது புலவன் தான் வழிபடுகின்ற கடவுளையோ, தனக்கு உதவி செய்த வள்ளலையோ புகழ்ந்து பாடுகின்ற நூல்.

பாட்டுக்குரிய தலைவன் உலா வருதலைச் சிறப்பித்துப் பாடுதலின் இஃது இப்பெயர் பெற்றது. உலா வருதலைப் பவனி வருதல் என்றும் கூறுவர். இது கலிவெண்பா என்னும் பாட்டு வகையால் பாடப்பெறும். தலைவன் வீதியில் பவனி வருகையில் அவ் வீதியிலுள்ள பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம் பெண் என்னும் ஏழு பருவப் பொது மகளிரும் அவனைக் கண்டு காதலுற்றதாகப் பாடப்படுவது.

காப்பியங்களில் அவற்றின் தலைவர்கள் தத்தமக்குரிய வாகனங்களின் மீது ஏறி உலாவரும் காட்சிகளைப் புனைந்து அமைத்தல் கவிமரபு.

முடிபுனைந்தும், மணம் புரிந்தும், வெற்றி பெற்றும் உலா வருதல் உண்டு.

முடிபுனைந்து உலா வந்ததை உதயணன் வரலாற்றைக் கூறும் பெருங்கதையால் உணரலாம். மணம் புரிந்து உலா வந்ததைச்

சீவகனைப் பாட்டுடைத் தலைவனாகப் பெற்ற சீவக சிந்தாமணியிற் காணலாம்.

இராமன் வெற்றி பெற்று உலா வந்ததை,

பேதைமார் முதல் கடைப் பேரிளம் பெண்கள் தாம்
ஏதியார் மாரவேள் ஏவவந்து எய்தினார்
ஆதி வானவர் பிரான் அணுகலால் அணிகொள்தார்
ஓதியார் வீதிவாய் உற்றவாறுரை செய்வோம்.

எனக் கம்பர் இராமாயணத்தில் இயம்பியுள்ளார். இதனை உலாவியற் படலம் என்றே அமைத்துள்ளார். இவ்வாறு தலைவர் உலா வருவதாகக் காப்பியங்களில் சுருக்கமாக அமைக்கப்படும் செய்தியையே தமக்குரிய பொருளாகக் கொண்டு விரிவு பெற அமைத்த பிரபந்தமே உலா வாகும்.

## பன்னாட்டுப் பழமொழிகள்

தொகுப்பு : குரு. பாண்டியன்,
திருச்செங்கோடு.

எவனொருவன் தனக்கு எதுவுமே தெரியாதென்று
அறிந்து கொள்கிறானோ அவனே அறிஞன்.
- லுதுவேனியா

கண்டிக்கத் தெரியாதவனுக்குக் கருணை
காட்டவும் தெரியாது.
- நேப்பாளம்

கவிஞன் என்பது படித்துப் பெறும் பட்டமல்ல.
கவிஞர்கள் பிறக்கிறார்கள்.
- கனடா

இன்பம் காண இருவழிகள். ஒன்று
தேவையைக் குறைப்பது. இரண்டாவது
வருவாயை அதிகப்படுத்துவது.
- பாலி

தத்துவம் என்பது அதி உன்னதமான சங்கீதம்
- பாபிலோனியா

இளமை என்பது வாலிபம் அல்ல. இளமை
நலத்தை ஆக்குவதும் அழிப்பதும்
வயது அல்ல. நம் மனமே.
- ஜாம்பியா

Published by **Mrs. S. Anjalai** from E21 Venkatapuram, Saidapet, Madras-15. Printed by Mr. Poongunran, at Niraimozhi Achagam, 124, Velecherry Road, Saidapet, Madras - 600 015.

Editor **Tamildasan**

220588





## டிசம்பர் 6ம் தேதி டாக்டர் அம்பேத்கர் நினைவுநாள் - மாநிலம் எடுத்துள்ள தீர்மானம்.

ஒவ்வொரு ஆண்டும் டாக்டர் அம்பேத்கர் நினைவு அஞ்சலி செலுத்த மாநில அமைப்பு ஒரே இடத்தில் கூடி அஞ்சலி செலுத்தியது. இதன் சார்பாக 15.11.1992 அன்று காலை 10.00 மணி அளவில் மாநில மற்றும் மாவட்ட நிர்வாகிகள் கூட்டம், சைதாப்பேட்டை நரிக்குறவர் பள்ளியில் மாநிலத் தலைவர் தலைமையில் கூடி கீழ்க்கண்ட தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது.

தீர்மானம் : டிசம்பர் 6ம் தேதி டாக்டர் அம்பேத்கர் நினைவு நாளன்று கர்நாடக மாநிலம் பெங்களூரில் பிரஜா விமோசனா சபாவின் சார்பாக திரு. ஜிகானிசங்கர் அவர்களின் தலைமையில் நடைபெறும் மாநாட்டில் கலந்துக்கொள்ள மாநிலத் தலைவர் அவர்களுக்கு அழைப்பு வந்திருப்பதன் காரணமாக தென்மாநில அளவில் ஒரு அமைப்பினை உருவாக்க முடிவு எடுக்கவும் தலைவர் மற்றும் மாநில நிர்வாகிகள் கலந்துக்கொள்ள இருப்பதால் அந்தந்த ஒன்றிய நிர்வாகிகள் ஆங்காங்கே இருக்கின்ற சிலைகளுக்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தும்படி தீர்மானிக்கப்படுகிறது. கிளை மன்றங்கள் ஒவ்வொரு கிளை மன்றத்தின் சார்பாக படம் வைத்து அஞ்சலி செலுத்தவும் தீர்மானிக்கப்படுகிறது.

## பௌத்தம் - அறிந்துக் கொள்க.

தொகுப்பு : செல்வி புத்தபிரியா

1. பானாதி பாதா வேரமணீ ஸக்கா பதம் ஸமாதியாமி
கொலை செய்யாமல் இருப்பது என் விரதம்.

2. அதின்னா தானாவேர மணீ ஸிக்கா பதம் ஸமாதியாமி
களவு செய்யாமல் இருப்பது என் விரதம்.

3. காமேச்சு மிச்சா சாரா வேரமணீ ஸிக்காபதம் ஸமாதியாமி
விபச்சாரம் செய்யாமல் இருப்பது என் விரதம்.

4. சூராமோய மஜ்ஜபமா தட்டானா வேர
ஸிக்காபதம் ஸமாதியாமி
பொய் சொல்லாமல் இருப்பது என் விரதம்.

5. சூராமேராய மஜ்ஜபமா தட்டானா வேர
ஸிக்காபதம் ஸமாதியாமி
மனதை மயக்கும மதுவை அருந்தாமல் இரு
என் விரதம்.

INDIA SUDAR – FORTNIGHTLY SOCIAL AWAKENING – REGD. NO.





# ஐ ஓ பி வழங்கும் பரிசுக் காசோலைகள் மற்றும் பரிசுப் பத்திரங்கள்

## பெருமையுடன் வழங்குங்கள் மகிழ்ச்சியுடன் பெறுவோர்கள்

ஐ.ஓ.பியின் பரிசுக் காசோலைகள்: ரூபாய் 21, 51, 101, 201 மற்றும் 501 மதிப்புகளில் பெறலாம். எல்லா ஐ.ஓ.பி கிளைகளிலும் பணமாக்க இயலும்.

ஐ.ஓ.பியின் பரிசுப் பத்திரங்கள்: ரூபாய் 21, 51, 101 மற்றும் 1001 மதிப்புகளில் பெறலாம். காலாண்டுக்கொருமுறை கூட்டுவட்டியோடு, பத்திரத்தேதிக்கு ஓர் ஆண்டுக்குப் பிறகு எல்லா கிளைகளிலும் பணமாக்கிக் கொள்ள இயலும். எப்போது வேண்டுமாயினும் பணமாக்கிக் கொள்ளும் வசதியும் உண்டு.

**இந்தியன் ஓவர்ஸீஸ் பாங்க்**

உங்கள் வளர்ச்சிக்கோர் உத்தம நண்பன்.

IOB 1981 92 TM


Advt.